## ஸ்பெயின் பயணத்தில் ரூ.3,440 கோடிக்கு புரிந்துணர்வு ஒப்பந்தம்: சென்னை திரும்பிய முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்



ஸ்பெயினில் இருந்து நாடு திரும்பிய முதல்வர் ஸ்டாலினை சென்னை விமான நிலையத்தில் அமைச்சர்கள் துரைமுருகன், டி.ஆர்.பாலு எம்.பி., திமுக நிர்வாகிகள் ஆர்.எஸ்.பாரதி, பூச்சி முருகன் உள்ளிட்டோர் மாலை அணிவித்து வரவேற்றனர்.

**சென்னை:** ஸ்பெயின் பயணத்தின்போது3 பெரிய நிறுவனங்களுடன் ரூ.3,440 கோடி முதலீட்டுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டுள்ளன. மக்களவை தேர்தலுக்கு பிறகு அடுத்தடுத்த வெளிநாட்டு பயணங்கள் திட்டமிடப்படும் என்று, சென்னை திரும்பிய முதல்வர் ஸ்டாலின் தெரிவித்தார்.

தொழில் முதலீடுகளை ஈர்ப்பதற்காக முதல்வர் ஸ்டாலின் அரசுமுறை பயணமாக கடந்த ஜனவரி 27-ம் தேதி ஸ்பெயின் புறப்பட்டு சென்றார். 8 நாள் பயணத்தை முடித்துக்கொண்டு, அவர் நேற்று காலை சென்னை திரும்பினார். விமான நிலையத்தில் முதல்வரை தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா, நிதி துறை செயலர் உதயச்சந்திரன் உள்ளிட்டோர் வரவேற்றனர். பின்னர், திமுக சார்பில் பொதுச்செயலாளர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர்கள், பொருளாளர் டி.ஆர்.பாலு மற்றும் நிர்வாகிகள் வரவேற்றனர்.

பின்னர், செய்தியாளர்களிடம் முதல்வர் ஸ்டாலின் கூறியதாவது: ஸ்பெயினுக்கு சென்றதும் முதல் நிகழ்வாக, முன்னணி தொழில்நிறுவனங்கள் பங்கேற்ற

முதலீட்டாளர் மாநாடு நடைபெற்றது. ஸ்பெயினின் பல்வேறு தொழில் குழுமங்களை சேர்ந்த நிர்வாகிகள் வந்திருந்தனர். அந்நாட்டு பொருளாதாரம், வர்த்தக துறை அமைச்சக அதிகாரிகள், ஸ்பெயின் தொழில் கூட்டமைப்பு பொறுப்பாளர்கள், 'இன்வெஸ்ட் ஸ்பெயின்' அமைப்பினரை சந்தித்தேன்.

தமிழகத்தில் தொழில் தொடங்குவதற்கு இருக்கும் உகந்த சூழல் பற்றி எடுத்துக்கூறி, இங்கு முதலீடுகளை மேற்கொள்ளுமாறு வலியுறுத்தி கேட்டுக் கொண்டேன்.

அடுத்தடுத்த நாட்களில், ஸ்பெயினில் உள்ள முன்னணி நிறுவனங்களின் நிர்வாகிகளை தனித்தனியாக நேரில் சந்தித்தேன். அந்த வகையில், காற்றாலை மின் உற்பத்தி, நீர்மறுசுழற்சி நிறுவனமான ஆக்சியானா, உயர்தர கட்டுமான பொருட்கள், பீங்கான் பொருட்கள் உற்பத்திநிறுவனமான ரோக்கா, கன்டெய்னர் முனையங்கள், சரக்கு பூங்காக்களை அமைக்கும் ஹபக் லாய்டு நிறுவனம், உலக தரத்தில் சாலை கட்டமைப்பு வசதிகளை அமைக்கும் அபர்ட்டிஸ், மோட்டார் வாகன உதிரிபாகங்கள் உற்பத்தியில் உலகின் முன்னணி நிறுவனமான கெஸ்டாம்ப், ரயில்வே உற்பத்திதொழிலில் உயர் தொழில்நுட்பத்துடன் செயல்படும் டால்கோ, பொறியியல் வடிவமைப்பு, பொறியியல் கல்வித் திறன் பயிற்சிக்கான நவீனகருவிகளை உற்பத்தி செய்யும் எடிபான், உயிரியல் ஆராய்ச்சி, மருந்து உற்பத்தி நிறுவனமான மேப்ட்ரீ ஆகிய நிறுவனங்களின் நிர்வாகிகளை சந்தித்து கலந்துரையாடினேன்.

அவர்கள் அனைவரும் தங்கள்தொழில் திட்டங்களை விளக்கியதுடன், தமிழகத்தில் தொழில் முதலீடுகளை மேற்கொள்ள ஆர்வமாக இருப்பதையும் தெரிவித்தனர். இந்த முயற்சிகளால் ரூ.3,440 கோடிமுதலீட்டுக்கு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. குறிப்பாக, ஹபக் லாய்டு நிறுவனம் ரூ.2,500 கோடி, எடிபான் நிறுவனம் ரூ.540 கோடி, ரோக்கா நிறுவனம் ரூ.400கோடி முதலீடு செய்ய உறுதி அளித்துள்ளன. மற்ற நிறுவனங்களும் எதிர்காலத்தில் தங்கள் முதலீடுகளை மேற்கொள்வார்கள் என்ற நம்பிக்கை உள்ளது. தமிழகம், தமிழகஅரசு மீது உலகளாவிய தொழில் நிறுவனங்களுக்கு இருக்கும் நம்பிக்கையை இது காட்டுகிறது.

உற்பத்தி துறையில் சீனாவுக்கு மாற்றாக இந்தியா கருதப்படும் இந்த வேளையில், அந்த துறையில் முந்தி செயல்படும் மாநிலமாக தமிழகம் முன்னேறி வருவதையும், பெரிய அளவிலான வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தும் பல முதலீடுகள் தமிழகத்தில் கடந்த 2ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளதையும் 'நியூயார்க் டைம்ஸ்'பத்திரிகை சுட்டிக்காட்டி பாராட்டிஉள்ளது. இதுபோன்ற பாராட்டுகள்தான் எங்களை மேலும் உற்சாகப்படுத்தி செயல்பட வைக்கின்றன.

ஸ்பெயின் பயணம் மிகவும் பயன்உள்ளதாக அமைந்தது. தொடர்ந்து,இதுபோன்ற அடுத்தடுத்த பயணங்களும் திட்டமிடப்படும். மக்களவை தேர்தல் நெருங்குவதால், அதற்கு பிறகு என் பயணங்கள் இருக்கும்.

நாடாளுமன்றத்தில் பிரதமர் மோடி பேசியதை பார்த்தேன், படித்தேன், ரசித்தேன், சிரித்தேன். மக்களவை தேர்தலில் 400 இடங்களை கைப்பற்றுவோம் என்றும் கூறியுள்ளார். மொத்தம் உள்ள 543 இடங்களையும் கைப்பற்றுவேன் என்றுசொன்னாலும் ஆச்சரியம் இல்லை.நடிகர் விஜய், கட்சி தொடங்கியுள்ளார். மக்களுக்கு தொண்டாற்றயார் வந்தாலும் மகிழ்ச்சி. இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் கூறினார்.

## லட்சத்தீவு சுற்றுலா மேம்பாட்டுக்கு ரூ.3,600 கோடி ஒதுக்க திட்டம்



**புதுடெல்லி:** பிரதமர் மோடி இந்தாண்டு தொடக்கத்தில் லட்சத்தீவு சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அங்கு அழகிய கடற்கரை, சாகச சுற்றுலா வசதிகள் குறித்து பிரதமர் மோடி வெளியிட்ட படங்கள் உலகின் கவனத்தை ஈர்த்தன. இதை மாலத்தீவு அமைச்சர்கள் 3 பேர்

சமூக ஊடகத்தில் விமர்சித்தது சர்ச்சையை ஏற்படுத்தியது. இதனால் இந்தியாவில் உள்ள பிரபலங்கள் பலர் மாலத்தீவு சுற்றுலாவை புறக்கணித்து லட்சத்தீவு செல்வதாக அறிவித்தனர்.

லட்சத்தீவு அழகான கடற்கரைமற்றும் தீவுகளை கொண்டிருந்தாலும், அங்கு அதிகளவிலான சுற்றுலா பயணிகள் தங்குவதற்கான உள்கட்டமைப்பு வசதிகள் இல்லை. இதனால் உள்நாட்டு சுற்றுலா மற்றும் வேலைவாய்ப்பை ஊக்குவிக்க லட்சத்தீவின் பிற தீவுகளிலும் சுற்றுலா கட்டமைப்புகளை மேம்படுத்த கவனம் செலுத்தப்படும் என இடைக்கால பட்ஜெட்டில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அறிவித்தார்.

அதன்படி லட்சத்தீவில் ரூ.3,600கோடி செலவில் உள்கட்டமைப்புகளை மேம்படுத்த மத்திய அரசு திட்டமிட்டுள்ளது. லட்சத்தீவு கேரள கடற்கரையிலிருந்து 220 கி.மீ. முதல் 440 கி.மீ. தூரம் வரை 36 தீவுகளாக 32 சதுர கிலோ மீட்டர் அளவுக்கு உள்ளது.

இங்கு மேம்பாட்டு பணிக்கு 13 திட்டங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. ஆன்ட்ரோத், கல்பேனி, கடாமத் தீவுகளில் துறைமுக வசதிகள் ஏற்படுத்தப்படவுள்ளன. இதற்கான நிதி, துறைமுகம் மற்றும் நீர்வழி போக்குவரத்து மேம்பாட்டுக்கான சாகர்மாலா திட்டத்தின் கீழ் கிடைக்க உள்ளது.

## ஐசிசி டெஸ்ட் தரவரிசை பட்டியல்: முதலிடம் பிடித்து பும்ரா சாதனை



**துபாய்:** ஐசிசி டெஸ்ட் கிரிக்கெட் பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசையில் இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரீத் பும்ராமுதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளார்.

டெஸ்ட் கிரிக்கெட் பந்து வீச்சாளர்களுக்கான தரவரிசை பட்டியலை ஐசிசி வெளியிட்டுள்ளது. இதில் இங்கிலாந்து அணிக்கு எதிராக விசாகப்பட்டினத்தில் நடைபெற்ற 2-வது டெஸ்ட் போட்டியில் 9 விக்கெட்கள் வீழ்த்திய இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் ஜஸ்பிரீத் பும்ரா முதலிடத்தை பிடித்துள்ளார். இதன் மூலம் ஐசிசி டெஸ்ட் தரவரிசை பட்டியலில் முதலிடத்துக்கு முன்னேறிய முதல் இந்திய வேகப்பந்து வீச்சாளர் என்ற வரலாற்று சாதனையை படைத்துள்ளார் 30 வயதான ஜஸ்பிரீத் பும்ரா.

ஐசிசி தரவரிசையில் முதலிடத்தை கைப்பற்றும் 4-வது இந்திய வீரர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார் பும்ரா. இதற்கு முன்னர் அந்த இடத்தை ரவிச்சந்திரன் அஸ்வின், ரவீந்திர ஜடேஜா, பிஷன் சிங் பேடி ஆகியோரும் அலங்கரித்துள்ளனர்.

விசாகப்பட்டினம் டெஸ்ட் போட்டியில் பும்ராவின் அபாரமான பந்து வீச்சால் இந்திய அணி 106 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடரை 1-1 என சமநிலையை அடையச் செய்தது. பும்ரா முதலிடத்துக்கு முன்னேறிய நிலையில் அந்த இடத்தில் கடந்த 11 மாதங்களாக ஆதிக்கம் செலுத்தி வந்த ரவிச்சந்திரன் அஸ்வின் 3-வது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளார்.

ஜஸ்பிரீத் பும்ரா 881 புள்ளிகளுடன் 3 இடங்கள் முன்னேறி முதலிடத்தை பிடித்துள்ள நிலையில் தென் ஆப்பிரிக்காவின் காகிசோ ரபாடா 851 புள்ளிகளுடன் 2-வது இடத்தில் தொடர்கிறார்.

2 இடங்கள் பின்தங்கி உள்ள ரவிச்சந்திரன் அஸ்வின் 841 புள்ளிகளை பெற்றுள்ளார். ஆஸ்திரேலியாவின் பாட் கம்மின்ஸ் ஒரு இடம் பின்தங்கி 828 புள்ளிகளுடன் 4-வது இடம் வகிக்கிறார்.

ஆஸ்திரேலியாவின் ஜோஷ் ஹேசில்வுட் (818), இலங்கையின் பிரபாத் ஜெயசூர்யா (783), இங்கிலாந்தின் ஜேம்ஸ் ஆண்டர்சன் (780), ஆஸ்திரேலியாவின் நேதன் லயன் (746), இந்தியாவின் ரவீந்திர ஜடேஜா (746), இங்கிலாந்தின் ஆலி ராபின்சன் (746) ஆகியோர் முறையே 5 முதல் 10-வது இடங்களில் உள்ளனர்.

EVA STALIN IAS ACADEMY